# தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VII.—No. 7.] MADRAS:—SUNDAY FEBRUARY 12, 288. A. S. [Monthly, 4 Annas.


சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.


இந்து கடவுள்.
இந்தியாவின்வனவாசிகள்.
திருஞானசம்பந்தர்.
மனிதனுக்கு அழிவில்லாத [ஆன்மா உண்டா.
சில்லறை.


## இந்து கடவுள்.

இந்துமதமானது அவலட்சணத்திற்கும் கோரத்திற்கும் பேர்போனது. இந்தவார்த்தைகள் ஒருவேளை இந்துமதஸ்தருக்குப் பிரியமாயிரா. ஆனால் அது அப்படியிருக்கிறபடியால், நாம் வித்தியில்லாமற் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த கடவுளுக்கு இருப்பதாகத் தெரியவருகிற கொடுமையைப்போல உலகத்திலுள்ள வேறே எந்தமதத்திலும் சர்வ வல்லமை யுள்ளவரென்று சொல்லப்பட்ட கடவுளுக்கு அவ்வளவு கொடுமை யிருக்குமென்று தோன்றவில்லை. கிரிஸ்தவக் கடவுள் கொடுமையும் துர்மார்க்கமும் வஞ்சமும் அவலட்சணமுமுள்ளதே. இந்துகடவுளோ, நிச்சயமாய் அதிக கொடுமையும் துர்மார்க்கமும் வஞ்சமும் அவலட்சணமுமுள்ளதுதான். ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு கடவுளும் வெகுவாய அதைச் சிருட்டித்த ஜனங்களைப்போலத்தானிருக்கிறது. ஆனால் இந்து கடவுள் மனிதனுக்குச் சமானமா யிருப்பதுபோல வேறே எந்த கடவுளும் அவ்வளவு நெருக்கமாக ஒத்துவரவில்லை; கடவுள் சிருஷ்டிக்கப்பட்டகாலத்திருந்த ஜனங்களின் விருபபும் வெறுப்பும் சற்குணமும் துர்க்குணமும் நீதியும் கர்மமும்இந்துகடவுளினுடைய நானாவிதமான விளையாட்டுகளால தெரியவருவதுபோல, வேறேஎந்தக்கடவுளிலும் அதின்செய்கைகளிலும் அவ்வளவு தெளிவாய் விளங்கவில்லை. இந்த கடவுள் கொடுமையானகாலத்தில் செய்யப்பட்டது,ஆதலால் அந்தக்கடவுளுமகொடுமையுள்ளதே. அது மவுடீகமான காலத்தில் செய்யப்பட்டது, ஆதலால அதுவும் மவுடீகமுள்ளதே. அது காமம் நிறைந்தகாலத்தில் பிறந்தது, ஆகலால் அதுவும் காமியே, கடவுளைக்குறித்துக்கொலைக்காரர்களென்றும் அநீதக்காரர்களென்றும் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம், ஆனால் அது கூட்டிவைக்கிற கடவுளென்று நாம் கேள்விப்பட்டிருப்பது அரிது! இந்துக்களுக்கு அவர்களுடைய கடவுள் நடுவிலிருந்துகொண்டு கூட்டிவைக்கிறவராயிருக்கிறார்! இது அதிசயமானதல்ல, அது கடவுள் சித்தமென்று மூளை குறைவான இந்துவானவன் (ஏதாவதுகேட்டால் மணடிபோட்டுஉட்கார்ந்து சால்வையை புஜத்தின்மேல் போட்டுக்கொண்டு அட்டகாசமாய் உத்தரவுசொல்லுகிற மோஸ்தராக) சொல்லுகிறான். மேலும், தற்கால தலைமுறையைச்சேர்ந்தவனாய், தான் ஐரோப்பாசாஸ்திரப் பயிற்சியினால் நாகரீகமுண்டானதற்குமுந்தியே நாகரீகமடைந்த வம்சத்திற் பிறந்தவனென்று மமதைகொண்டு, அந்த மமதையானது கர்னல் ஆல்காட்டு அல்லது மாடாம்பிளாவட்ஸ்கியினுடைய ஆசீர்வாதத்தால் உன்னதமடைந்திருக்கிற இந்த வாலிபன் தன் முன்னோர்களுடைய தேவதைகள் மில் அல்லது பரடே என்பவரைப் போன்றவர்களைப்பார்க்கினும் தர்க்கமுதலிய சாஸ்திரங்களை அதிக நன்றா யறிந்திருக்கின்றனவென்றும், அவற்றின் நடத்தைகள் அக்காலத்திருந்த மனிதர்களின் ஞானத்துக்கு ஒத்திருந்தனவென்றும், என்னசெய்யவேண்டியதா யிருந்தனவோ அவற்றைத்தான் செய்தனவென்றும் பார்வைக்கு நம்பிக்கையுடனே சொல்லுகிறான். இப்படிப்பட்ட நியாயத்திற்கு ஆட்சேபனை யொன்றுங்கிடையாதென்று நினைக்கிறார்கள், ஏன்? தாங்கள் நம்புவதினால் மாத்திரமேயல்ல, அந்நியதேசமான அமெரிக்காதேசஸ்தராகிய கர்னல் ஆல்காட்டும் அப்படியேசொல்லி, அதைத்தான் நம்புவதாக நடிப்பதினாலுந்தான். தொன்றுதொட்டு கடவுளைச் செய்பவர்களாக உரிய சுதந்தரம்பெற்ற பிராமணர்கள் குரு தந்திரத்துக்கு பலங்கட்டுகிற அந்தக் கர்னலிடத்தில் நன்றிகூர்ந்தவர்களாய், தங்களுக்குத் தொண்டுபூண்ட அடிமைகளிடத்திலிருந்து ஒவ்வொரு காசையும் உரிஞ்சுவிடுகிற பிரியமான தொழிலை நடத்திவருகிறார்கள். இந்தியா மிகுந்த செல்வமுடையதென்று சொல்லப்படுகிறது, அது வாஸ்தவமே. ஆனால் அதினுடைய ஜனங்கள் ஏழைகளும் நிர்ப்பாக்கியர்களுமாகவே யிருக்கிறார்கள். ஏனெனில், இந்தியாவின் செல்வம் எங்கே குவிக்கப்பட்டிருக்கிறது? ஆலயங்களின் துர்விநியோகமான ஏனங்களிலே, மோசக்கார பிராமணனுக்கு ரூபாய் கொடுக்கும்பொருட்டுத் தானும் தன் குடும்பத்தாரும் பட்டினிகிடந்து சாகிற ஏழை யுழைப்பாளியும் மதவைராக்கியனும் கஷ்டப்பட்டுச்செய்கிற ஆர்ஜிதத்தினாலே கோடிகோடியாய் குவிக்கப்படுகிறது. வருகிற மாசி பங்குனி மாசங்களில் சென்னபட்டணத்துக்கடுத்த இரண்டொரு ஆலயத்திலே ஒரு உற்சவம் நடக்கப்போகிறது, அதில் தேவதைகளுக்கு அதிக லாபமும் ஜனங்களுக்கு அதிக நஷ்டமுமே. கடைசியாய் என்னத்திற்காக? கடவுளர்களுக்குள்ளும அவலட்சணமான செய்கை காணப்படுகிறதென்றும, அப்பிரகாரமே மனிதன் அவலட்சணமான செய்கையைச் செய்வது வெட்கக்கேடல்லவென்றும், ஆராதிப்பவர்கள் தெரிந்துகொள்ளும்பொருட்டுப் புராதனமான அவர்கள் கடவுளின் அவலட்சணச்செயகையைச் சிறப்பிப்பதற்காகத்தான் அந்த உற்சவம் நடத்தப்படுகிறது. அப்படிப்பட்டதேவதைகளோடு இடைவிடாத சேர்க்கையினால் இந்துக்களுடையும் விவேகம் இவ்வளவே. மேலேகுறித்த ஸ்தலங்களாகிய திருவொற்றியூருக்கும் மயிலாப்பூருக்கும் பெரும்பாலும் காமாதுரர்கள் செல்லுகிறார்கள். அது அதிசயமல்ல; ஏனெனில், திருவொற்றியூரிலுள்ள ஆலயத்திலேதான் அவர்களுடைய கடவுள் இரண்டு நபர்களுக்கு இன்பமூட்டியது; மயிலாப்பூரிலேதான் அவர்களுடைய கடவுளர்கள் தாமே காமவிகாரச் செய்கைக்குள்பட்ட உற்சவம் நடக்கிறது. இதைப்பற்றிக் கர்னல் ஆல்காட்டு புருவத்தை நெறித்துப் பார்க்கலாம், மாடாம் பிளாவெட்ஸ்கி பற்களைக் கடிக்கலாம், தியாசொபிக்குத் தொண்டு பூண்டவர்கள் முகத்தைச் சுளிக்கலாம், ஆயினும், இந்தச் சங்கதி அவர்களுடைய மதக் கிரந்தத்தில் பரிஷ்காரமா யெழுதிநிலைபட்டிருக்கிறது. இந்தச் சங்கதிகள் எழுதியிருக்கிற கிரந்தம் ஊர்ஜிதமான தல்லவென்று சொல்லிப் புரட்டுவதற்கு இடமிருக்கிறதா! இல்லை! ஏனெனில் அது இந்துக்களுடைய சிறந்த கிரந்தங்களிலொன்றாயிருக்கிறது. அதை அவர்களுக்கு வேதத்திற்குச் சமதியாகச் சொல்லலாம்,'அந்தச் சங்கதி புரக்கணிக்கப்படத்தக்கதல்ல.' அப்படியாயின், இனி அதைப்பற்றி யுக்த்தியான வாசகம் வேண்டாம், தியாசொபி காரடவித்தை வேண்டாம், இனி அதைப்பற்றிக் கூக்குரல் வேண்டாம். அந்த தேவதைகளை நாம் துக்கிக்காமலும், பெருமைப்படுத்தாமலும், புகழ்ந்து பாடாமலும், தமக்குத்தாமே சாகும்படி விட்டுவிடுவது உத்தமம்.

சுவக்கியானி.

—:○:—

## இந்தியாவின் வனவாசிகள்.

[இந்த விஷயம் இங்கிலீஷ் வாசிக்குஞ் சிறுவர்களுக்குத் தெரிந்திருக்குமாயினும, இங்கிலீஷ் வாசியாத மற்றவர்கள் தெரிந்துகொள்ளும்பொருட்டும், அதன்மேல், பூர்வ குடிநிலைமையை ஆலோசிக்கும்பொருட்டும், இங்கு எழுதலாயிற்று.]

இந்தியாவின் மத்தியிலுள்ள மலைகளிலும காடுகளிலும் வசிக்கிற ஜனங்களுக்கும் ஊர்களில் வசிக்கிறஜனங்களுக்கும் வெகுபேதமுண்டு. அவர்கள் சிறுத்துக்கறுத்து மிருதுவானவர்களாயிருந்தாலும், சுறுசுறுப்புள்ளவர்கள்; அவர்களுடைய கண்கள் கூர்மையாய் ஒரு நிமிஷமாவது அமைதியாயிராமல் அலைந்துகொண்டிருக்கின்றன. அவர்கள் வஸ்திரம் தரிப்பது அரிது, வில்லுகளும் அம்புகளும் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கொன்றுமிங்கொன்றுமாயிருக்கிற குடிசைகளில் வாசஞ்செய்கிறார்கள். சிலவேளைகளில் வேறே இடங்களுக்குப் போ

கவேண்டுமானால், தூக்கிக்கொண்டுபோகும்படியான குடிசைகளையெடுத்துக்கொண்டுபோய்ப் போட்டுக்கொண்டு அவற்றில் வசிக்கிறார்கள். அவர்களில் அநேகர் கொத்துங்குறையுமாய்த் தாங்கள் செய்யும்பயிரில் உற்பத்தியாவதையும் பண்டமாற்றினால் ஊராரிடத்தில் தாங்கள் பெறுவதையும் தின்று ஜீவிக்கிறார்கள். காட்டுக்காய்களும் பழங்களுமே அவர்களுக்கு முக்கியமான ஆகாரம். ஒவ்வோர்சமயத்தில் மிருகங்களைக் கொன்று தின்கிறார்கள். அநேகர் ஆடுமாடுகளையும் கோழிகளையும் வளர்க்கிறார்கள். சிலர் பிசின்களையும் சாயவஸ்துக்களையும் சேகரித்து அதன்மூலமாய்ச் சீவனஞ் செய்கிறார்கள். வனவாசிகளுடைய வழக்கங்களும் ஊர்களிலுள்ள இந்துக்களுடைய வழக்கங்களும் வெகுவாய்ப்பேதப்படுகின்றன. வனவாசிகளுக்கு ஜாதிபேதமில்லை, அவர்களில் அநேகர் எருதுகளைக்கொன்று தின்கிறார்கள்; அவர்கள் அதிகமாய்ச் சாராயங் குடிக்கிறார்கள். செத்தவர்களைச் சாதாரணமாய்ப் புதைக்கிறார்கள். அவர்களோடுகூட அவர்களுடைய ஆயுதங்களையும் புதைக்கிறார்கள். அவர்கள் பிராமணர்களைப் பூசிப்பதில்லை, ஆனால்அவர்களுக்குள் மந்திரத்திலும் குறிசொல்லுவதிலும்தேர்ந்தவர்களென்று சொல்லப்பட்ட குருக்கள்மாருண்டு. வைசூரி வார்க்கிறதாக எண்ணப்பட்ட அம்மனை அதிக பயபக்தியோடு பூசிக்கிறார்கள். அவர்களை துஷ்டமிருகங்கள் அடித்துக்கொண்டுபோய்விடலாமாதலால், சிலபாகங்களிலே அவர்கள புலிகளுக்கதிபதியென்று சொல்லப்பட்டதேவதையைபூசிக்கிறார்கள். ஒரிசாவிலே காண்ட்ஸ் என்று சொல்லப்பட்டவர்கள் பூமிதேவிக்குச் சாந்தி செய்கிறார்கள். அந்தத் தேவதைக்கு நரபலிகொடாவிட்டால் தங்கள் பயிர் விளையாதென்றுசொல்லி, பூர்வத்தில் நரபலிகொடுத்துவந்தார்கள். இந்தக்கோரமான வழக்கத்தை இங்கிலீஷ் துரைத்தனத்தார் நிறுத்திப்போட்டார்கள். ஒரு முக்கியமானவிஷயத்திலே ஊர்களிலுள்ள அநேகரைப்பார்க்கினும் வனவாசிகள் மேலானவர்கள். ஏனெனில், ஒருவிதாயகமாய்ப் பொய்பேசாமல் உண்மையே பேசுகிறவர்கள். வனவாசிகளுடைய பூர்வீக சரித்திரம் நிச்சயமாய்த் தெரியவில்லை. அவர்களை இந்தியாவின் ஆதிகுடிகளில் மிகுந்துநின்றவர்களென்று சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் இப்போதிருக்கிறநிலையிலேதான் ஆரியவமிசத்தார்படையெடுத்து வந்தகாலத்திலே தட்சண இந்துஸ்தானத்திலிருந்தார்கள்.

[மேற்கண்டவிஷயத்தை நாம் வாசித்தபோது, அந்நியதேசத்தார்கள தங்கள் தங்கள் ஆதிஜனங்களைப்பற்றிச் சொல்லியிருப்பதை ஞாபகத்திற்கொள்ளவேண்டும். அவர்கள் கடவுள் சிருஷ்டியை ஒப்புக்கொள்ளுகிறவர்களாயிருந்தும், அதற்கு விரோதமாயிருப்பினுமிராவிடினும், உண்மையைத் தெரிவிக்கவேண்டி, ஆதியில் மனிதர்கள் மவுடீக நிலையிலிருந்ததையும், வரவர விவேகம்விளங்கி நாகரீகமடைந்துவருவதையும், பற்பலதிருஷ்டாந்தங்களுடனே விளங்கக்காட்டியிருக்கிறார்கள். அப்படியிருக்க, ஜனவரி மீ 15 உ பத்திரிகையில் பிரசுரமான ஜாதியைப்பற்றிய உபந்நியாசத்திலே கடவுள் ஆதிமனிதர்களை ஞானத்துடனே சிருஷ்டித்தாரென்று சொல்லியிருப்பதை யோசிக்குமிடத்து, அப்படிக்கன்றி மவுடீகர்களாகச் சிருஷ்டித்தாரென்பதை ஏற்றுக்கொள்ளுவோமாகில், சர்வஞானமும் சர்வவல்லமையுமுள்ள கடவுள் மனிதனைப் பின்னால் சீர்திருந்தவிட்டுப் பிரதமத்தில் மவுடீகனாகச் சிருஷ்டித்தாரென்பது அவர்பேரில் தோஷாரோபணை செய்வதாயிருக்குமாதலால், அது நிவாரணைக்காக ஞானத்துடனே சிருஷ்டித்தாரென்று சொல்லியிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் சங்கற்பத்துடனே கடவுளானவர் ஞானமுள்ளவனாகச் சிருஷ்டித்த மனிதன் பின்னால் கெட்டுப்போனானென்பதினால், அவனுக்கென்று இஷ்டமென்பதொன்றிருப்பதாகத் தெரியவருகிறது. அந்த இஷ்டம் கடவுளினது நியதியின்றி அவனுக்குவந்திருக்கக்கூடாதாதலால், அவருடைய சங்கற்பத்துக்கு விரோதமாய் அந்த இஷ்டத்தை அவர் மனிதனுக்குக்கொடுத்தாரென்பது அவர்பேரில் பெருந்தோஷமாகும். ஆதலால், ஆகியில் மனிதர்கள் மவுடீகர்களாயிருந்தார்களென்று அந்நியதேசத்தார்கூறுவது இவொலியூஷன் சித்தாந்தத்திற்கும் நமது அனுபவத்திற்குமொத்திருத்தலால், இதையே நாம் ஊர்ஜிதமானதாக நம்பவேண்டியிருக்கிறது.]

---

## திருஞானசம்பந்தர்,
## இயேசுவானவர் செய்த
## அற்புதங்கள்.

---

### திருஞானசம்பந்தர் அவதாரம்.

ஆசியாவின் தெற்கிலுள்ள பரதகண்டத்திலே சோழமண்டலத்திலே சீர்காழிப்பதியிலே பிராமணர்குலத்திலே கௌணியர் கோத்திரத்திலே தோன்றிய சிவபாதவிருதயர் உயர் ஒப்பில்லாத பகவதியார் என்கிற பெயருள்ள இருவர்கள் இருந்தார்கள் இவர்கள் பரமசிவத்தினிடத்தில் பக்தியை செலுத்திவரும்நாளில் புத்திரப்பேறின்மையால் மனம் நொந்து பரமசிவத்தினிடத்தில் பக்தியை செலுத்தியும் சிவனடியார்களுக்குதொண்டுபுரிந்தும் வந்தனர். புரியுநாளில் சாக்ஷாத் பரமசிவத்தின் பெருங் கருணையால் உலகம் உய்யும்பொருட்டு பகவதியாருடைய உதரத்தில் கெர்ப்பம்தரித்துத் தசதிங்களானபிறகு திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்தனர். நாளொருமேனியாயும் பொழுதொருவண்ணமாயும் பரமசிவத்தின் அருளால்வளர்ந்துவருகின்ற திருஞானசம்பந்தர் மூன்றாம்ஆண்டில் தன்தாதையாகிய சிவபாதவிருதயருடன் சிவாலயத்துக்குப்போய் சிவதரிசனம் செய்துவருவர், செயயுநாளில் ஓர்தினம் சிவபாதவிருதயர் ஆலயத்திலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யப்போயினர். அவ்வமயத்தில் திருஞானசம்பந்தர் அம்மாஅப்பாவென்று அழ, சர்வலோகதயாபரராகிய பரமசிவம் பார்வதியாரை நோக்கி இவனுக்கு முலைப்பால் ஊட்டென்று அருளிச்செய்தனர். அவர் ஆஞ்ஞைப்படி மாதேவியார் திருமுலைப்பாலூட்ட அப்பிள்ளையார் அழுகை தீர்ந்து சகல கலைகளையும் வேதங்களையும் ஓதாமலுணர்ந்தவராயும்சகலஅற்புத அருளைப்பெற்றவராயும் இருந்தனர். பிறகு அவர்தாதை கரையில் வந்து பிள்ளையாரை நோக்கி யார்பாலை அருந்தினை என்று அதட்டிக்கேட்க அவர் கையைநீட்டி ஆகாயத்தைச்சுட்டி உமாதேவியாரோடு நின்ற பரமசிவத்தை உற்றுநோக்கி உலகிலுள்ள ஆன்மகோடிகள் உச்சீவிக்கும்பொருட்டு கருணைக்கடலாகிய பரமசிவத்தின் மகிமையை மூன்றுபிராயத்தில் பதிகமாகப் பாடினார். அதாவது:—

தோடுடையசெவியன் விடையேறி யோர்தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசி யெனதுள்ளம் கவர்கள்வ
னேடுடையமலரான் முன்னாள்பணிந்தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமபுர மேவிய பெம்மா னிவனன்றே.

### இயேசுவானவர் திரு அவதாரம்.

ஆசியாவின் மேற்கிலுள்ள துருக்கிதேசத்திலே கலிலேயாநாட்டிலே நாசரேத்தூரிலே தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட கன்னிமரியாள் உதரத்திலே அண்டசராசரங்கள் அனைத்தும் ஆறுநாட்களில் படைத்த பராபரனானவர் மனிதர் பாவத்திலிருந்து மீட்கும்பொருட்டாக தமது பகுத்த ஆவியையும் பலத்தையும் அவளபேரில் தங்கும்படிச்செய்தனர். பின்பு தன் புருஷனை அறியாமல் கெர்ப்பவதியாய் இருக்கக்கண்டு யோசேப்பு சந்தேகித்து அவளை நீக்க எண்ணங்கொண்டிருக்கையில் காப்ரியேல் என்னும் தேவதூதன் சொற்பனத்தில் வந்து அவளைத் தள்ளவேண்டாம், அவள் பரிசுத்த ஆவியினால் கெற்பந்தரித்திருக்கிறாள் அவள் ஒரு பிள்ளை பெறுவாள், அப்பிள்ளைக்கு இயேசுவென்று பெயரிடுவாயாக என்று சொல்லிப்போனபின் யோசேப்பு சந்தேகமற்று இருக்கையில், தானும் தன் மனைவியாகிய மரியாளும் குடிமதிப்பு எழுதும்படி தன்ஊரிலிருந்து யூதேயாநாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப்போனார்கள் அவ்விடத்தில் ஒரு சத்திரத்திலே மாட்டுத் தொழுவத்திலே இயேசுவானவர் திரு அவதாரம் செய்தார். அவரை அங்குள்ள மேய்ப்பர்களுக்கு தேவதூதன் இராத்திரியிலேவந்து சொல்ல அவர்கள் உடனேவந்து பணிந்துகொண்டார்கள் அப்போது பரமசேனையின்திரள் அந்த தூதனுடனே தோன்றி உன்னதத்தில் இருக்கிறதேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல்பிரியமும் உண்டாவதாகவென்றுசொல்லி தேவனைத்துதித்தார்கள்.

(தி-ஞா) திருஞானசம்பந்தரை உபநயனசடங்கு செய்துகொள்ளும்படி உற்றார்வேண்ட அது தமக்குவேண்டுவது அன்றாயினும் உலகத்தில் வைதிகதர்மத்தை ஸ்தாபித்தல்வேண்டுமென அதற்கிசைந்து உபநயனம் பெறறுக்கொண்டனர்.

(இ-சு) இயேசுவானவர்க்கு எட்டாநாளிலே எருசலேமின்தேவாலயத்திலே விருத்தசேதனம் செய்யப்பட்டது.

(தி-ஞா) திருஞானசம்பந்தர்க்கு பிராமணோத்தமர் மந்திர உபதேசம்செய்யப்போகும்போது அவர்எண்ணிறந்தவேதங்களையும் அவற்றின் அங்கமாகிய பலகலைகளையும் எடுத்துச்சொல்ல அவர்கள்பரமசிவத்தின் அருளைப்பெற்றாரென்று அறிந்து அவரிடத்திலேயே வேதங்களையும் கலைகளையும் ஐயந்திரிபறக்கற்றுக்கொண்டார்கள்.

(இ-கி) இயேசுவானவர் பஸ்காபண்டிகைக்கு தாய்தந்தையர்களுடனே எருசலேமுக்குப்போய்த் தேவாலயத்தில் போதகர்நடுவில் உட்கார்ந்து அவரவர்கேட்ட கேள்விகளுககுத் தக்க விடைகொடுத்தார். இவர்பன்னிரண்டுவயதில்இவர்பேசும் திறத்தைக்கண்டு யாவரும பிரமித்தார்கள். முப்பதாவது வயதிலே ஞானஸ்நானம் யோர்தாநதிக்கரையில யோவானிடத்தில்பெற்றுக்கொண்டார். அப்போது பரிசுத்தஆவி புறுவைப்போல் அவர்பேரில் இறங்கிற்று.

(தி-ஞா) திருவறத்துறையில பரமசிவம் தமது திருக்குமாரருக்கு முற்றுச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னமும்கொடுக்கநினைத்து அந்தஸ்லத்திலுள்ள பிராமணர்கள் சொற்பனத்தில்தோன்றி திருஞானசம்பந்தன் நம்மிடத்துக்கு வருகிறுன், அவனுக்கு நம்மிடத்திலுள்ள சிவிகை, குடை, சின்னம் இவைகளைக்கொண்டுபோய் கொடுங்களென்று ஆக்கியாபிக்க, உடனே அவர்கள் விழித்து அவர்கள் எல்லாரும் ஆலயத்துக்குப்போய் சொர்ப்பனத்தில் கண்டபொருள்கள் இருக்கக்கண்டு ஆனந்தமடைந்து மூன்றையும் எடுத்துககொண்டு திருஞானசம்பந்தர்க்குக்கொடுகக அவர்மிகவும் மகிழ்வெய்தி பரமசிவத்தைப்பாடினுர்.

(இ-கி) இயேசு பரிசுத்தஆவியினுல் நிறைந்து யோர்தா நந்தையைவிட்டுத்திரும்பி வனுந்தரத்தில் பிசாசினுல் சோதிக்கப்பட்டு பின்பு ஆவியானவருடையபலத்தினுல் கலிலேயாவுக்குத் திரும்பிப்போனுர். அவர்கீர்த்தி எல்லாராலும் புகழப்பட்டது.

(தி-ஞா) திருநாணுவெனனுமூரில் தமது பரிஜனங்கள குளிரால் மிகவும்வருந்தி வியாதிகளதிகரித்ததால் திரிஞானசம்பந்தனைபபிரார்த்திக்க உடனே அவர்பனிப்பிணியை நீக்கியதால அந்நகரத்திலிருப்பவர்களுக்கும் அந்நாடு முழுமையுமுளள பிணிநீங்கி சுகமடைந்தார்கள்.

(இ-கி) ஒருநாள் இயேசு படவில்நித்திரைசெய்கையில் பலத்தசுழல்காற்றுண்டாகியது அதைக்கண்டுசீஷர் நடுநடுங்கினுர்கள் அவர் அக்காற்றை அதட்டி அமர்த்தினுர்.

(தி-ஞா) பட்டீஸ்வரத்திற்குப் போகும்பொழுது வெயிலின் வெப்பத்தைத் தணிக்கும்பொருட்டு திருஞானசம்பந்தர் திருமுடியின்மேலே சிவபூதம் முத்துப்பந்தரையெடுத்து பரமசிவத்தின்ஆஞையால் ஆகாயத்தில் தாங்கிச்சென்றது.

(இ-கி) ஒருநாள் இயேசு சீஷருடன் ஒரு உயர்ந்த மலையின் மேலேறினபோது அவர்வஸ்திரம பிரகாசமாய்ப் பிரகாசித்தது, அப்போது மோசேஎலியா இயேசுவுடன் பேசினதாகக்கண்டார்கள்,அவர்கள்மேல் மேகம்நிழலிட்டதுஇவர்என்னேசகுமாரன், இவருக்குச்செவிகொடுங்களென்று சப்தமுண்டாயிற்று.

(தி-ஞா) கொல்லிமழவன்புத்திரி முயலகனென்னும் வியாதியால் (தமரகண்டவலி) வருத்தப்பட்ட திருஞானசம்பந்தர் அக்கன்னியின்நோயைபரமசிவத்தின் அருளால் அகற்றினர்.

(இ-கி) எருசலேம் நகரத்தில் சிலமனுஷர் திமிர்வாதக்காரனை உள்ளேகொண்டுபோகவழியில்லாமல் வீட்டினுடைப்பிரித்து அதன்வழியாய் படுகையுடன்விட நோயாளியைநோக்கி மனிதனே உன்பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்றுர்;அவன் படுக்கையை யெடுத்துக்கொணடு நடந்துபோனுன்.

(தி-ஞா) திருமகலூரில் ஓர் வணிகன் பாம்புதீண்டி இறந்தான் அவன் கன்னிகை திருஞானர் பாதத்தில் விழுந்து அழுது வேண்ட அவர் திருவுளமிரங்கக் கருணைகூர்ந்து எழுப்பித்தந்தார்.

(இ-கி) நாயீனென்னு மூரில் ஒரே பிள்ளையை யிழந்த ஓர் கைம்பெண் பாடைக்குபின்னுல் துயரத்தோடு அழுதுகொண்டுபோவதைக் கண்ட இயேசுவானவர் மனதுருகி நீ யழவேண்டாமென்றுசொல்லி பாடையைதொட்டு வாலிபனேயெழுந்திருவென்று சொன்னுர், மறித்தோனெழுந்து தாயுடன் வீட்டுக்குப்போனுன்.

(தி-ஞ) திருவிழிமழலையில் திருஞானசம்பந்தர் பஞ்சத்திற்காக படியில் காசு கொடுத்ததினுல அடியார்கள் யாவருக்கும் யாதொருகுறைவின்றி அமுதளித்தார்.

(இ-கி) பெத்சைதா வனுந்தரத்தில் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் யெடுத்து வானத்தை யண்ணுந்து பார்த்து சீஷர்கள கையில் கொடுத்து ஐயாயிரம் புருஷர்களுக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டார், உடனே சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள், மீதியான துணிக்கைகள் பன்னிரண்டுகூடை நிறைய எடுக்கப்பட்டன.

தி-ஞா) திருவோத்தூரில் ஆண்பனையை பெண்பனையாக்கினுர்.

இ-கி) பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வரும்போது இயேசுவுக்கு பசியுண்டாயிற்று. அத்திமரத்தில் கனிகளில்லாமையால் இதுமுதலுன்னிடத்தில் கனியை புசியாதிருக்கக்கடவர்கள் என்றுர்; மறுநாட்காலையில் அத்திமரம் பட்டுப்போயிருக்கக்கண்டார்கள்.

(தி-ஞா) திருக்கோலக்காவென்னும் பதியில் பஞ்சாட்சரம் வெழுதப்பெறற பொற்றுளத்தை பரமசிவனுல் பெற்றுர். சிவபாதவிருதையர் யாகத்தின்பொருட்டு பொருள்கேட்க அவர் பரமசிவத்தினருளால் குறையாப்பொற்கிழியைக் கொடுத்தார்.

(இ-கி) கானுஎன்னும் ஊரிலே கலியாணம் நடந்தது, அவ்விடத்திலுளளதிராட்சரசமெல்லாம் செலவாய்விட்டது, ஜாடிகளை தண்ணீரால் நிரப்பி திராட்சரசமாக்கிக்கொடுத்தார்.

(தி-ஞா) மதுரைக்கு திருஞான சம்பந்தரின் வருகையைக் கேட்ட சமணர் ஒவ்வொருவரும் துர்ச்சொற்பனங்கண்டு மனங்கலங்கினுர்.

(இ-கி) இயேசுவை சிலுவையில் அறைந்தபோது தேவாலயத்தின் திரைச் சீலை கிழிந்தது.

(தி-ஞா) பாண்டியன் வியாதியைப்பற்றி அவன் மனைவியாகிய மங்கையர்க்கரசி திருஞானசம்பந்தரைவேண்ட விபூதியால் தடவி குணமாக்கினுர்.

(இ-கி) கலிலேயா கடலருகே கொன்னைவாயுடைய செவிடன்காதில் விரலவைத்து உமிழ்ந்து நாவைத்தொட்டு வானத்தை அண்ணுந்துபார்த்து, நிர்கக்கடவாயாக என்றமாத்திரத்தில் பேசவும் கேட்கவும் சக்தியடைந்தான். Y

(இன்னும்வரும்.)

## மனிதனுக்கு அழிவில்லாத ஆன்மாவுண்டா?

ஆன்மாவைப் பற்றிப் பற்பல கொள்கையோரைக் கேள்விகேட்குங்கால், பற்பல விதமாகச் சொல்லுகிறுர்கள். சில அத்வைதிகள் ஆத்மாவானது எங்கும்நிறைந்த பரமாத்மாவோடு சேர்ந்ததுதானென்றும், ஆனுல் தேகத்தில் கட்டுப்படுவதினுலே கண்டமாகி, மாயை அல்லது கர்மத்தினுல் விகாரமடைகிற தென்கிறுர்கள். தேகத்தில் எப்போது கட்டுப்படுகிறதெனக்கேட்கில், கரு தரிக்கும்போதே அதைத் தொட்டுக்கொண்டு தான் முன் குடியிருந்த சரீரத்தை விடுகிறதென்கிறுர்கள், அப்படியாயின், இந்தியாவில் தான் குடியிருக்கிற வீட்டுக்கு அடுத்தவீட்டிலும் குடிபுகும்படி நேரிடலாம், இங்கிலாந்திலுங் குடிபுகும்படிநேரிடலாமே, அப்போது இடையில் நேரிடும் பலவித தடைகளால் அறுபடாமல் தொடர்ச்சியாக 15,000 மயல் தூரத்திற்கு நீண்டு அவ்விடத்தில் கருவைத் தொட்டுக்கொண்டு, இந்தியாவில் தனது பழைய இருப்பிடத்தை விடுகிறது சாத்தியமென்று நினைக்கக்கூடவில்லையே யென்போமாகில், அங்கு சற்று யோசித்து, சாத்தியமாகத்தா னினைக்கவேண்டுமென்கிறுர்கள். அதிருக்கட்டும், ஜீவனுல் செய்யப்படுகிற காரியமே கர்மமாதலால், கர்மமேயில்லாத பிரதமத்தில் தேகம் எங்கிருந்துவந்தது, அதனுள் பரமாத்மாவின் கூருகிய ஆத்மா ஏன் நுழைந்தது? என்று கேட்போமாகில், அப்போதுதான்மாயையாகிய மயக்கம் அவர்களுக்குள் நுழைகிறது; நுழையவே, இப்படிப்பட்ட சங்கதிகள் அநாதியானவை. பரமரகசியமென்பது இப்படிப்பட்டவைதான், அது அவரொருவருக்கே தெரியுமென்கிறுர்கள்.

மற்றுஞ்சில கொள்கையோர் ஆதியில் கர்மம் வந்தவகை சொல்லமாட்டாமல், ஆன்மாவும் அநாதி அதனதன் கர்மத்துக் கிடாகச் சரீர மெடுக்கிற தென்கிறுர்கள். ஆன்மா சிருஷ்டிக்கப்படாமல் அநாதியாய் நிற்றலால், உலகத்தில் எத்தனை ஜீவன்க ளிருக்கின்றனவோ அத்தனை ஆன்மாக்களும் அநாதியாகவே யிருந்திருக்கவேண்டுமே, அந்த ஆன்மாக்கள் நமக்குத் தெரிந்த சில வருஷங்களுக்கு முன்வரையி லிருந்த ஜனசங்கியையோடு சரிப்பட்டுப்போய்த்தா னிருக்கவேண்டும், அதிலும் அதிகமாக இப்போது விர்த்தியாயிருக்கிற சங்கியைக்கு ஆன்மர்க்கள் எங்கிருந்து வந்தனவென்று கேட்டால், நூதனமாக யாதொரு ஆன்மாவு முண்டாகவில்லை, கர்மத்துக்கேற்றவாறு மிருகங்களாகவும் செடிவர்க்கமாகவும் ஜனித்திருந்த ஆன்மாக்களில் பல சில மானிடஜன்ம மெடுத்திருக்கவேண்டு மென்கிறுர்கள். யுகதர்மத்தின்படி வரவர பாபம் மேலிடுகிறதென்று சொல்லப்படுவதால், வரவர இழிந்த ஜன்மமெடுக்கவேண்டியதேயல்லாமல் எல்லாவற்றினுஞ் சிறந்த மானிடஜன்மமெடுப்பது கூடாமை யாகுமேயென்று கேட்கில், இப்படிப்பட்டவை நமது சிற்றறிவால் அள

விடத் தகாதவை யென்கிருர்கள். இவ்வண்ணம் கேள்விகளுக்கெல்லாம் சமயோசிதமாகப பற்பல கொள்கையுடைய இந்துக்கள் பற்பலவிதமாய்ச் சொல்லுகிருர்கள்.

ஆன்மாவிஷயத்தில் ஒருவழிப்பட்ட கிரிஸ்துமதத்தை யாராய்வோமாகில், (ஜெ. ஏச். பீட்டி என்பவர் சொல்லியிருக்கிறபடி) தேவ வாக்கென்று கிரிஸ்தவர்களால் நன்குமதிக்கப்பட்ட பைபிளிலே அநேக புஸ்தகங்களில் மனிதனுக்குள் அழிவில்லாத ஆன்மா யிருப்பதைப்பற்றி ஒன்றுஞ் சொல்லாதிருப்பது மிகவும் விந்தையா யிருக்கிறது. மோசேயானவர் மறுமையிலே நம்பிக்கைகொண்டவரல்ல; யூதர்களுடைய பிரபந்தமாயிருக்கிற சகல சட்டதிட்டங்களிலும் ஆசாரகாண்டங்களிலும் ஆன்மாவைப்பற்றி அவரொன்றுஞ்சொல்லவில்லை. அவர் யாதொரு கட்டளையை அனுஷ்டிப்பிக்க விரும்பினபோது, "உமது வாழ்நாள்கள் உலகத்தில் நீடித்திருக்கும்படி இதைச் செய்யுங்கள்" என்று சொன்னுரேயல்லாமல், "நீங்கள் நரகத்தில் தள்ளப்படாதபடி இதைச் செய்யுங்கள்" என்று சொன்னுரில்லை மோசே கடவுளோடு பேசினுரென்று நமக்குச் சொல்லப்படுகிறது. மோட்சம், நரகம், அழிவிலலாத ஆன்மா, இவைகளிருப்பதைப்பற்றி யொன்றுஞ்சொல்லாமல் விட்டுவிட்ட இந்தப் பெருந்தவறுதலைப்பற்றி நாம் என்னென்று நினைக்கிறது? அப்படிப்பட்டவைகளைக்குறித்துக் கடவுளுக்கும் ஒன்றுந் தெரியாது மோசேய்க்கும் ஒன்றுந்தெரியாது. இவ்விதமாய் ஏசுவின்காலத்திலே யூதமதப்பிரிவில சத்யூசிகள் அதிக பற்றுள்ளவர்களா யிருந்தார்கள், உயிர்த்தெழுந்திருப்பதில்லையென்பதில் மோசேயோடுகலந்தவர்கள். சாலோமோன் எழுதிய கிரந்தத்திலே அவருக்குக் கடவுள் அதிக ஞானங் கொடுத்ததாகச் சொலலப்பட்டிருக்கிறது. அவர் "மிருகத்தைப்பார்க்கினும் மனிதன் சிரேஷ்டப்பட்டவனல்ல, சகலத்திற்கும உயிர்ப்பு ஒன்றே, சகலமும் ஒரேஇடத்திற்குப் போகின்றன, சகலமும் மண்ணுலானவை, மறுபடி சகலமும் மண்ணே யாகின்றன" என்று சொல்லியிருக்கிருர். லவுகிகி இதைப்பார்க்கினும் தெளிவாய்ச் சொல்லப்போகிறதில்லை. ஆயினும், கடவுள் வாக்கியமாகிப இதில் நம்பிக்கை வைத்திருப்பதாகச் சொல்லுகிற அப்படிப்பட்டவனை அஞ்ஞானியென்றும் தள்ளப்படத்தக்கவனென்றும் கிரிஸ்தவர்கள் சொல்லுவார்கள். பைபிலிலே புது ஏற்பாட்டுப் புஸ்தகத்திற்கு வரும்போதுதான், மோட்சம் நரகம் அவற்றில் வசிப்பவர்கள் யாவும் நமக்கு வெளியாகின்றன. அவ்விடங்களிலே மனிதனுக்கு விஸ்தாரம பிசாசுகளும, ஆன்மாக்களும், ஆவிகளும், பரிசுத்த வாயுக்களு மிருக்கின்றன. நல்ல ஆவிகளும் கெட்ட ஆவிகளும இடைவிடாது போராட்டஞ் செய்கிற ஸ்தானத்தைக் காணுகிருன். ஆதியில் கடவுள் கொடுத்த வாக்கைக் கெடுத்து இல்லாததை சேர்த்ததற்குமுந்தி, ஆதியிலிருந்தபடி அந்த வார்த்தையானது, தங்கள் மூதாதைகளோடு நித்திரைசெய்யப்போனவர்களுக்காக மோட்ச சாம்பிராச்சியமாவது நரக வேதனையாவது ஏற்படுத்தாமலே, லவுகிக சித்தாந்தத்தை அனுசரித்திருந்ததாகக் காணுகிறோம்.

மோட்சம்,நரகம், ஆன்மாவைக்குறித்து பைபிலில் பழைய ஏற்பாட்டிலே என்ன கருத்திருக்கிறதோ அதுதான் என்னுடைய கருத்தும். ஒரு ஸத்யூசியானவன் உயிர்த்தெழுதலிலாவது தேவதூதனிலாவது ஆவியிலாவது நம்பிக்கை யில்லாதவனென்று சொல்லப்படுவானுகில், நானும் ஸத்யூசிதான். ஆனுல் பைபிலே அநேக பொய்களும் சிலகட்டுக்கதைகளும் வெகுகொஞ்சம் உண்மையும் கலந்திருப்பதாக நம்புகிற இக்காலத்தவர்களநேகர் புதுஏற்பாட்டின் வழிசாய்ந்து, மனிதனுக்கு அழிவில்லாத ஆன்மாயிருக்கிறதென்று நம்புகிருர்கள்.—இவ்வாறு பற்பலகொள்கையோர் பற்பலவிதமாய் வாதிப்பதைக் கிரகிப்பது அதிசுலபமல்ல. ஆன்மா அழியாமல் நித்தியமானதா யிருந்தாலொழிய மோட்சநரகமடைவதற்கும் மறுஜனனமெடுப்பதற்கும் சாத்தியமாகமாட்டாது. அது அழிந்துபோகத் தக்கதென்று ருஜுவாகாதபட்சத்தில் அழியாததாகத் துணியவேண்டுமாதலால், மனிதனேடு அவனுடை ஆன்மாவும் அழிந்துபோகவேண்டியதுதானென்று நம்புவதற்குண்டாகிய நியாயங்களில சிலவற்றை எடுத்துக்கூற எத்தனப்படுகிறேன்.

(இன்னும்வரும்.)

R. R.

## சில்லரை.

மிஸ்டர் பிராட்லாவானவர் இராஜாங்கத்தைப்பற்றிமாத்திரம் உபந்நியாசஞ் செய்ய வேமவுத்துக்கு நவீனமாய்ப்போனபோதிலும், அவ்விடத்திலுள்ள மதவைராக்கியர்கள் அவருடைய வரவினுலே மிகவுங் கலங்கினுர்கள். சபை கூடினகாலத்திலே, கூதிர்காலத்தில் இலைகள் உதிர்வதுபோல, பக்தியான சிறு புத்தகங்களை யுதிர்த்தார்கள். அவற்றில் ஒன்று நமக்கு அனுப்பப்பட்டது. அது யாரோ வொருவரால் சுவிசேஷங்களைப்பற்றி எழுதப்பட்ட விவேகமற்ற சிறு புத்தகமாயிருக்கிறது. அவர் சூதான மார்க்கத்தில் நிபுணராகக காணுகிருர். ஆயினும் புத்திமாத்திரம் மந்தந்தான். "நாஸ்திகாளுக்குப் பரிஷ்காரமானமறுமொழி" என்கிறவசனத்தைத்தலைப்பிலும்,"மூடன்கடவுளில்லையென்று மனதில்நினைத்துக்கொள்ளுகிருன்" என்கிறவழக்கமான ஒழுக்கவசனத்தைஅடியிலும் அச்சிட்டிருக்கிறஒருமெல்லீசானசிவப்புச்சீட்டு உள்ளேவைத்திருக்கிறது. இவ்வாறு மதவைராக்கியத்தை இழிவாக வெளிப்படுத்தினபோதிலும்,மிஸ்டர்பிராட்லா சிறப்பாகவேஏற்றுக்கொள்ளப்பட்டார்.

மிஸ்டர் பிராட்லா உறக்கம்பிடித்த இடமாகிய வேமவுத்தைப்பார்க்கத் துணிந்து போனதினுலே மதவைராக்கியர்கள கோபங்கொண்டதுமல்லாமல், ரிவரெண்டு, ட். ஓவன்ஸ் அவர்களும் முந்திய ஆதிவாரம் சாயங்காலம் ஒரு விசேஷப் பிரசங்கமுஞ் செய்தார். இந்தக் கோபாவேசங்கொண்ட பாதிரியார் "அந்த மனுஷியன்," "அந்த பிராட்லா," பெண்பிள்ளை பீசாண்டு" என்று இவ்விதமாய்ப் பேசினுர். அவருடைய குருபீடமேககர்ச்சனைக்கு மிஸ்டர் ஜான் மார்லியும் ஆளாயினர். டெம்பில் கோம்பிலுள்ள கனவான்களுக்குப் பிரசங்கஞ் செய்யும்படி "அந்த அஞ்ஞானமுள்ள வைரி"யை வரவழைத்ததற்காக லார்டு வால்வெர்ட்டன் அவர்கள் வெட்கமடையவேண்டியதுதானென்றுங் கூறினர்.

ஆயினும் ஐயோ, பரிதாபம்! அந்தப் பாதிரியார் பிரத்தியட்சமாய்க் கத்துகிற ஆடாயிருக்கிருர், ஏனெனில், தாயினுடைய காலில் தாலாட்டப்படுகிற ஒவ்வொரு குழந்தைக்கும் 'கடவுளில்லை' யென்று சொல்லும்படி கற்பிக்கும்படியான காலம் வந்திருப்பதாய்க் கோருவதாகக் கடிதத்தில் எழுதியிருக்கிருரென்று மிஸ்டர் மார்லியைக்குறித்துப் பேசினர். (மிஸ்டர் மார்லி ஒருபோதும அப்படி எழுதாமையால்) அந்தப் பாதிரியார் சுத்தப் பொய்யராகவாவதிருக்கிருர், அல்லது அவருடையதாயின் காலிலிருந்து அதிகதூரம் தவழ்ந்துவராதவராகவாவதிருக்கிருர். அந்த விருத்தபெருமாட்டி இன்னுஞ் சீவித்திருப்பாராகில், துஷ்டப்பயலென்று அவருக்கு ஒரு அறை கொடுத்திருக்கத்தக்கதே.

Freethinker.

## தமிழ்சந்தாவிபரம்.

| | | Rs | A. | P. | |
|---|---|---|---|---|---|
| மாசம் | 1-க்கு | 0 | 4 | 0 | முன்பணஞ்செலுத்தவேண்டு |
| ஷை | 3-க்கு | 0 | 10 | 0 | ம். சந்தாவோடுகூட, இந்தி |
| ஷை | 6-க்கு | 1 | 2 | 0 | யாவிலும் பர்மாவிலு முள்ள |

வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணுவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு அரை அணு வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 0—13—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்ததற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

**நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணு 1.**

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.